RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-222921

OPEN ACCESS

# சிவசங்கரியின் சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது? என்னும் புதினத்தில் உளவியல் சிந்தனைகள்

ரு. ரிஜோனா [அ, *], சு. விஜயாகலைவாணி [அ]

[அ] தமிழ்த்துறை, ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது), தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா.

# Psychological Thoughts in Sivasankari's novel Chinna Noolkkanda Nammai Siraipaduthuvathu

**R. Rejona [a, *], S. Vijayakalaivani [a]**

[a] Department of Tamil, APC Mahalaxmi College for Women, (Affliated to Manonmaniam Sundaranar University), Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: jeromerejonarejona18465@gmail.com

Received: 26-09-2022
Revised: 05-11-2022
Accepted: 10-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Psychology has found its way into various fields today. The need for psychology is so well recognized that there are no fields without psychology. Its diversity can be known as educational psychology, clinical psychology, business psychology, political psychology. Psychology is related to the subconscious mind of man and its functioning. Although there are various research efforts such as psychology and literature today, it can be said that they are not yet complete according to the concepts and frameworks proposed by psychologists such as Freud, Jung and Lacan in relation to art literature. In that way, it is the need to examine the literature on the basis of psychological concepts. The main purpose of this study is to explore the psychological thoughts in Sivasankari's novel. Also, this article is a literature that reflects the daily life of the people. Psychological thoughts are revealed in this article. Psychological research helps to understand the attitudes and moods found in the literature. It is only through such studies that the universality of the world can be known and the truth that "subconscious consciousness" is applicable to the literature will be revealed. Along with that, the scientific ideas embedded in the literature can also be brought out.

**Keywords:** Psychology, Subconscious, Sivasankari, Concepts

## முன்னுரை

இலக்கியங்களை உளவியல் நோக்கில் பார்க்கும் அணுகுமுறை ஏற்கனவே தமிழில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தாலும் இன்னும் கூர்மையாக்கப்படவில்லை. உளவியலாளர்களான பிராய்ட்டு, யுங், லக்கான் போன்ற முன்னோடிகளால் கலை, இலக்கியம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பல கோட்பாடுகளும் கருத்தியல்களும் இன்னமும் தமிழுக்கு முழுமையாக வந்து சேரவில்லை. எனவே இன்னும் இந்தப் பார்வையால் தமிழாய்வு பின்தங்கியே நிற்கின்றது.

உளவியல் (psychology) என்பது இன்று ஒரு பெரும் அறிவுத்துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. இத்துறையானது பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் பிரசித்தம் பெற்றது. எனினும் உளவியல்சார் சிந்தனைகள் தமிழ் மக்களிடையே நிலைபெற்று இருந்துள்ளமையை

இக்கட்டுரையின் மூலம் அறியலாம். இவ்வாய்வானது உணர்வு, சமூகமதிப்பீடு மற்றும் அறிவு சார்ந்த உளவியல் சிந்தனைகளை எடுத்துரைக்கின்றது.

## உளவியல்

உளவியல் என்பது வளர்ந்து வருகின்ற ஒரு துறையாகும். இதனால் திட்டவட்டமான வரைவிலக்கணம் ஒன்றைக் கூறிவிட முடியாது எனினும் உளவியலாளர்களான பிராய்ட், யுங், லக்கான் போன்றோர் கூறிய கருத்துக்களை உளவியலுக்கான வரையறைகளாகக் கொள்ளலாம். அகராதிகளின் துணைக்கொண்டு ஆராயும் போது "மனிதமனம் செயல்படுவதைக் குறித்தும் மனிதத்தின் செயல்பாடுகளான நடத்தை குணம் குறித்தும் ஆராயும் (அறிவியல்) துறை (psychology) எனவும் The Science of the mind - மனதத்துவ சாஸ்திரம்" எனவும் பொருள் கூறப்படுகின்றது (Ramalingam, 2007).

அந்த வகையில் சிக்மண்ட் பிராய்ட் மனத்தின் இயல்பு பாகுபாடு, செயற்பாடு என்றும் நிலைகளில் உளவியலை ஆராய்ந்து உளவியலுக்கு அறிவியல் அந்தஸ்து அளித்தார். இவரே இலக்கியப் படைப்புகளை ஆராயப்பயன்படும் உளப்பகுப்பாய்வு பற்றி முதன் முதலில் எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கியுள்ளார்.

பிராய்டும், யுங்கும் மனித மனத்தின் செயற்பாடுகளுக்கு அடிமனம் எவ்வாறு காரணமாகிறது என்பதையும், கலை இலக்கியப் படைப்புகளில் அடிமனத்தின் பங்கு என்ன என்பதையும் விளக்கியுள்ளார். இதன் அடிப்படையில் இலக்கியப் படைப்புகளில் இடம்பெறும் அடிக்கருத்து. பாத்திரப்படைப்பு, படைப்புகளில் கையாளப்பெறும் குறியீடுகள் போன்றவற்றை ஆராயும் உளவியல் சிந்தனைகளுக்கு வித்திட்டவர்கள் மேற்கூறப்பட்டவர்களே ஆவர்.

முன்னைய இருவராலும் தெளிவுபடுத்தப்பெற்ற அடிமனம், அறிமனம் என்னும் பாகுபாட்டில் லக்கான் அதிக ஆர்வங்கொள்ளவில்லை. மாறாக அடிமனம் எவ்வாறு தொழிற்படுகின்றது. அடிமனச் செயற்பாட்டிற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைக் குறித்தே ஆராய்ந்தார். இவ்வாறாக இலக்கியத்தில் உளவியல் தாக்கம் உள்ளமையைக் காணலாம்

"சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது" என்னும் புதினத்தில் வாழ்வில் அதிகப்பிரச்சனைகள் உள்ளன. அப்பிரச்சனைகளை களைவது குறித்து இவ்வாய்வுக் கட்டுரையில் காண்போம்.

## உணர்வு நிலை வெளிப்பாட்டில் உளவியல் சிந்தனை

இலக்கியங்கள் உயிரோட்டம் வாய்ந்தவை. இவற்றில் உணர்வு என்பதே அத்தகைய செய்யுட்களின் உயிராக நின்றிருப்பதைக் காணலாம். உணர்வு என்பது மொழிகளைத் தாண்டி அனைத்து உயிர்களுக்கும், மனிதர்களுக்கும் பொதுவானது. மொழிகளைக் கடந்து மனிதனை ஒன்றிணைக்கும் ஆற்றல் உணர்வு நிலைக்கு மட்டுமே உண்டு.

தொல்காப்பியர் தனது மெய்ப்பாட்டியலிலே மனிதருக்குள் தோன்றும் அடிப்படை உணர்வுகள் குறித்து உளவியல் ரீதியாகச் சிந்தித்துள்ளமையை அவரது சூத்திரங்களைப் பயில்வதன் மூலம் அறியலாம்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று

அப்பால் எட்டாம் மெய்ப்பாடு என்ப"

என்ற சூத்திரத்திலே சிரிப்பு, அழுகை, இளிவரல், மருட்கை, பயம், பெருமிதம், வெகுளி, உவகை என்று கூறப்படுவன எட்டும் மெய்ப்பாடு என வரையறை செய்துள்ளார். அந்த வகையில் உணர்வுக்கும் தொழிற்பாட்டிற்கும் இடையே காரண காரியத் தொடர்படுத்திக் காட்டுகிறார் (Ilampuranar, 1953).

## அச்சம்

அச்சம் என்பது வரவிருக்கும் அபாயம் குறித்து ஏற்படும் மனநடுக்கம் எனப் பொருள்படும். பய உணர்வு என்று கருதப்படும். இந்த அச்ச உணர்வானது எழும் சூழலைத் தொல்காப்பியர்,

"அணங்கே விலங்கே கள்வாதம் இறையெனப்

பிணங்கல் சாலா அச்சம் நான்கே"

என்ற மெய்ப்பாட்டியல் நூற்பாவில் நான்கு வகையான அச்ச உணர்வுகள் வெளிப்படுகின்றன என்று கூறுகின்றார். இத்தகைய அச்ச உணர்வானது ஒரு வித பயத்தைக் காட்டும் (Ilampuranar, 1953).

சிவசங்கரியின் சின்னநூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது என்னும் புதினத்தில் "ஒரு நாள் பேச்சுவாக்கில், இருட்டு என்றாலும், பேய், பிசாசு என்றாலும் தனக்கு ரொம்ப பயம் என்றும், தான் அச்சம் அதிகம் படுவேன் என்று கமலம் கூற வீட்டில் பெரியவர்கள் இல்லாத ஒரு நாளில் அவளைப் பயமுறுத்தத் தீர்மானித்தேன்" (Sivasankari, 2017).

சிவசங்கரியும் கமலமும் சினேகிதிகள். கமலத்தை பயமுறத்தி அவளை அழவைப்பதில் சிவ சங்கரிக்கு அலாதிப்பிரியம். அதுபோலவே அவளை பயங்காட்டி விட்டாள். இப்படியொரு பயத்தை எதிர்பார்க்காததால் கமலம் அதிகம் அச்சம் மேலிட்டவளாய் காய்ச்சல் வந்து நான்கு நாட்கள் பள்ளிக்கு வரவில்லை என்மனம் அவளை பயமுறுத்த வேண்டும் என்றே தீர்மானித்தது என்று சிவசங்கரி குறிப்பிடுகின்றார்.

இதனை, நற்றிணையின் செய்யுள் ஒன்றில் பாலை நிலத்தின் தன்மையினை நினைத்துத் தோழியிடம் தலைவி புலம்பும் பொழுதும் தன் நெஞ்சுக்கு உரைக்கும் போது உணர்வு தோன்றல் புலம்பும் தன்மையினைக் காணமுடிகின்றது. அச்சவுணர்வானது ஒரு பொருளை அடைய முடியாத நேரத்திலும், தனக்குக் கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற ஏக்கத்தின் காரணமாகவும் தோன்றுகின்றது. இதில் உளவியல் சிந்தனை வெளிப்படுகிறது.

## நகை

நகை என்றால் சிரிப்பு என்று பொருள். நகை என்னும் மெய்ப்பாடு தனது பொருளைக் கொண்டு நான்கு நிலைகளில் தோன்றுமென்பதை தொல்காப்பியர் விளக்குகின்றார்.

"எள்ளல் இளமை பேதமை மடனென்று

உள்ளப்பட்ட நகைநான் கென்ப" (Ilampuranar, 1953)

ஆசிரியர் சிவசங்கரி தன் நண்பர்களுடன் சேர்ந்து அரட்டை அடிக்கும் போது, "தண்ணி குடிச்சிட்டு வாரேன் என்று உள்ளே ஓடி கதவின் மறைவில் நின்று, சப்தமில்லாமல் பெரிசாய் சிரித்து, சிரிப்பை அடக்க முயற்சிக்கும் மற்றவர்களையும் கெடுப்போம்" (Sivasankari, 2017)

"இப்படிப் பின்னால் நின்று கொண்டு சிரிப்பது ஒரு பழக்கம் என்றால் யார் வந்து போனாலும் உடனே அவர்களைப் போல மிமிக்ரி பண்ணிக்காட்டி, தானும் சிரித்து மற்றவர்களையும் சிரிக்க வைப்பது இன்னொரு வழக்கம்" (Sivasankari, 2017)

என்று சிவசங்கரி தனது புதினத்தில் குறிப்பிட்டுள்ளார். அன்றைக்கிருந்த அசட்டுப் பழக்கங்களில், வீட்டுக்கு யார் வந்தாலும் அவர்களைப் பாட, வீணை வாசிக்கச் சொல்லி சிரிப்பது ஒன்று. ஒரே வயதினராய் நான்கைந்து பேர்கள் கூடி விட்டால், புதிதாய் வருகின்றவளைக் கஷ்டப்படுத்துவார்கள். மேற்கூறப்பட்ட கருத்தில் ஒரு பிரச்சினையை மற்றவர் நிலையில் நின்று பார்க்கும் பண்பு 'மற்றவர் நிலைக்குள்ளாதல்' என்னும் உளவியல் சிந்தனை வெளிப்படுகின்றது.

### சமூக மதிப்பீடுகளின் வெளிப்பாட்டில் உளவியல் சிந்தனை

உளவியல் என்பது ஒருவன் தன்னைத்தானே அளவிடும் கருவி. ஒருவன் தன்னைப் பற்றிச் சிந்தித்ததன் விளைவாகவே உளவியல் பிறந்தது. சமூகம் தனிமனிதர்களாலான ஓரமைப்பு. அந்தவகையில் நன்மை-தீமை நல்லது-கெட்டது என்று இருதுருவ நிலையில் உளவியல் சிந்தனை அமைந்துள்ளதனைக் காணலாம்.

## நட்பு

உளவியல் சிந்தனைகளின் சமூக மதிப்பீடுகள், ஒழுக்க நெறிகளின் நட்பு என்பது முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. ஒரு நண்பனைத் தேர்ந்தெடுப்பதிலும் நட்புப் பாராட்டுவதிலும் ஒவ்வொருவருக்கும் இடையில் தனித்துவங்கள் உண்டு. அந்த வகையில் நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றியும் நட்புப்பாராட்டும் தன்மை குறித்தும் பேசப்படுகிறது. இதனை, "நிஜமான நட்பு என்பது பரிச்சயம், தொடர்பு ஆகியவற்றிலிருந்து மாறுபட்டது. நுனிப்புல் நட்பை பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்ளுதல் நட்பு என்று நினைப்பது அசல் நட்பாக இல்லாமல், இப்படி அகால மரணமடைவதற்கு.... ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ளாததும், எங்கோ எப்போதா ஒரு சின்ன முடிச்சு விழுந்துவிட்டதை உணராததும், மற்றவரின் பலவீனங்களைக் துவக்கத்திலேயே அறிந்து ஏற்காததும், யோசிக்காமல் பேசி, நடந்து கொள்வதும்" என்று நட்பு பற்றி சிவசங்கரி இப்புதினத்தில் கூறுகிறார் (Sivasankari, 2017).

"உன் வாழ்க்கை மேடு பள்ளம் காணாதது. ஏதேனும் வரவேண்டுமென்றால், அது எனக்கு வரட்டும் அதை என்னால் தாங்கமுடியும் என்பாள் பானு. இன்று வரைக்கும் எங்கள் நட்பு அன்றுபோலவே இருப்பதுடன் காலம் மாறி எத்தனையோ நினைப்பு மற்றவருக்கு சிலிர்ப்பை உண்டாக்குவதாக இருக்கிறது" (Sivasankari, 2017)

இதனை வள்ளுவர்,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு"

நான்கு பேர் இருக்கும் சபையில் ஆடை உடம்பை விட்டு அகலுமேயானால், அதைக் கண் பார்த்து மூளைக்கு விவரம் சொல்லுமுன் கை, தன்னிச்சையாக விலகின ஆடையை இழுத்துவிட ஓடுவது போல, அழைப்புக்காகக் காத்திராமல் சந்தர்ப்பம் அறிந்து, தேவைக்குத் தக்கப்படி உதவ முன்வருவதுதான் சுத்தமான நட்பின் இலக்கணம் என்கிறார் திருவள்ளுவர்.

தன்னை அறியாமல், சொட்டுச் சொட்டாய் சேர்ந்து மிகப்பெரிய பிணைப்பை உண்டாக்குவதுதான் உயர்ந்த நட்பு என்கிறார் ஆங்கில மேதை ஜான்ஸன்.

"அரிய வாழி தோழி பெரியார்

நாடி நட்பின் அல்லது

நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே"

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்"

என்று நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம் (Narayanasamy, 1956).

மேற்கூறப்பட்ட பாடல்கள் இரண்டிலும் நட்பாராயும் உளவியல் குறித்தும், ஆய்ந்து நட்புக் கொண்டபின் நண்பன் நஞ்சைக் கொடுத்தாலும் அதை மகிழ்வோடு பருகும் நிலையையும் சமூக மதிப்பீட்டு உளவியல் என்றே கொள்ளலாம். முழுமையாக புரிந்து கொள்வதும், விட்டுக் கொடுப்பதும் அனுசரித்து நடப்பதும், நட்புக்கும் கூட இந்த தன்னலமற்ற குணங்களே அழுத்தமான

அஸ்திவாரம். குறைகளை குறைத்து நிறைகளை வளர்த்து விழிப்புடன் செயல்பட்டால் அன்பு நிறைந்த சிறந்த நண்பர்கள் எந்த சூழ்நிலையிலும் நம்மை காத்து நிற்பார்கள்.

## திருமண பந்தத்தில் நிலைத்து நிற்றல்

இன்று திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டாலும் அவற்றில் அதிகமானவை நீதிமன்றங்களில்தான் முற்றுப்பெறுகின்றன. அந்தவகையிலே திருமணம், குடும்பம் பற்றிய உளவியல் சிந்தனை மக்களிடத்தும் நிலவியிருந்துள்ளமையினைக் காணலாம்.

“திருமணமானபோது என் கணவர் போபாலில் இருந்தார். தனிக்குடித்தனம்.... சமைக்க, குடும்பத்தைச் சரிவர நடத்தத் தெரியாத நிலை புரிந்து கொள்ளுதல், பொறுமை, விட்டுக் கொடுத்தல், அனுசரணை இவற்றின் துணையோடு, தெளிவாகச் சிந்திக்க, செயலாற்றப் பழகிவிட்டால் குடும்பத்தை தெளிவாக திட்டமிட்டு நடத்தலாம்” என்று சிவசங்கரி இந்நூலில் குறிப்பிடுகின்றார் (Sivasankari, 2017). இதனை,

“அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்

பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த

பிழையா நன்மொழி தேறிய இவட்கே” (Narayanasamy, 1956)

என்று கூறும் நற்றிணைச் செய்யுளில் தலைவியின் மார்புகள் தளர்ந்து இளமை போய் முதுமை வந்த நிலையிலும் கருங்கூந்தல் நரைகூடிப் போனபோதும் உன்னை நம்பி வந்த அவளைக் கைவிடாதே என அறிவுரை கூறி நிற்பது உளவியலின் வெளிப்பாடே எனலாம்.

## அறிவு நிலை வெளிப்பாட்டில் உளவியல் சிந்தனை

அறிவுசார் உளவியல் சிந்தனைகள் இலக்கியங்களில் இருந்துள்ளன. உணர்ச்சி அறிவு என்னும் இரண்டும் வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்றன. இந்த இரண்டிற்கும் இடையிலான போராட்டமே வாழ்க்கை.

## அறிவு

அறிவு என்பது மிகப்பெரிய செல்வம் என்பார்கள் அறிவினை கொண்டு எந்த சூழ்நிலைகளையும் எதிர்கொண்டு ஒருவனால் வாழமுடியும். இதனை ஆசிரியர் “பட்டணத்தில் பிறந்தவர்களுக்குத்தான் மேலைநாட்டு சங்கீதத்தைப் பற்றின அறிவு இருக்கும். கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு இருக்காது என்று சொல்கிறீர்களா?” என்று கூறுகின்றார் (Sivasankari, 2017).

இதனை,

“களிறுமாறு பற்றிய

தேய்புரி பழங்கயிறு போல

வீவதுகொல் என வருந்திய உடம்பே”

என்ற நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம் (Narayanasamy, 1956).

தலைவி மேலுள்ள காதலினால் தலைவன் பொருள் தேடச் சென்று பாதிப் பொருள் ஈட்டிவிட்டாள். அவன் மனமோ திரும்பி அவளிடம் செல்ல நினைக்கிறது. அறிவோ அவளுக்காக மீதிப்பொருளையும் ஈட்டச் சொல்கிறது, அவனோ அறிவு மனம் என்னும் பலம் வாய்ந்த இரு யானைகளால் இழுக்கப்படும் அறிவு, மனம் பற்றிய நுண்ணிய அறிவு இருந்துள்ளமை தெளிவாகின்றது.

## மனச்சோர்வு

மனத்தளர்ச்சி அல்லது மனச்சோர்வு அல்லது உளச்சோர்வு என்பது மன வெறுப்பு போன்ற ஒரு அசாதாரண மனநிலையைக் கொண்டிருத்தலாகும். நம்மில் பலரும் இப்படிப்பட்ட மனச்சோர்வுக்கு அடிக்கடி பலியாவதால், இந்த அனுபவத்துக்குக் காரணம் என்ன, இந்த கஷ்டத்தை எப்படித் தடுக்கலாம் என்பதை விளக்கமாகவே ஆராயலாம். மனச்சோர்வு இரண்டு வகைப்படும்.

## தற்காலிக மனச்சோர்வு

என்ன வாழ்க்கை இது என்கிற சலிப்பால் ஆக்ரமிக்கப்பட்டு, பின்னர் தானாகவோ அல்லது இந்த நிலை நீடிப்பது நல்லதற்கில்லை என்கிற உந்துதலினாலோ, நம்மைச் சரிசெய்து கொள்வதுதான் தற்காலிக மனச்சோர்வு.

"பத்துநாட்கள் இப்படிக்கழிந்த பின்னர், சற்றும் எதிர்பாராத பெரிய இடத்தில் பெண்ணுக்கும் திருமணம் பேச தரகர் வர, புத்தி அதில் போக வேண்டிய நிர்பந்தம் எழ, ஒரு தினுசாய் தன் தற்காலிக மனச்சோர்விலிருந்து வேதகிரி மீண்டார்" என்று இப்புதினத்தில் ஆசிரியர் தற்காலிக மனச் சோர்வைப் பற்றி விளக்கிக் கூறியுள்ளார். சில சந்தர்ப்பங்களில், பிரச்சினைகளை எதிர்நோக்க அஞ்சுவதும் கூட மனச்சோர்வு காரணமாகும் (Sivasankari, 2017).

## தவிர்க்க இயலாமல் வரும் மனச்சோர்வு

இந்த நிகழ்ச்சியினால் உலகம் முடிந்து விடவில்லை. இது என்னைப் பாதிக்கவோ அல்லது நிம்மதியை பறிக்கவோ இடம் கொடேன். "தவிர்க்க இயலாமல் வரும் மனச்சோர்வுகளை ஏற்பதும், அவற்றின் பாதிப்புகளைக் குறைப்பதும் எப்படி என்பதை உதாரணம் மூலம் அறியலாம்" (Sivasankari, 2017)

கட்டாயம் ஒருவரை மனச் சோர்வின் பிடிகளிலிருந்து காப்பாற்றி கரையேற்றும் பிடிமானங்கள் என்று மன உளவியல் நிபுணர்கள் அடித்துக் கூறுவது. அனுபவம் சிறந்த முறையில் கொண்டு செல்லும் உளவியல் சார்ந்த மனப்பக்குவத்திற்குச் சான்றாக அமைகிறது.

## முடிவுரை

இலக்கியம் உளவியல் சார் சிந்தனைகள் ஒரு துறையாக வளர்ச்சி அடைந்திராத போதும் உளவியல் எண்ணக்கருத்துகளும், சிந்தனை முயற்சிக்கும் இடம் பெற்றிப்பதனை இலக்கிய சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது. இலக்கியம் மனிதரிடையே வாழப்பட்ட உளவியல் சார்ந்த சிந்தனைகளைத் தேடித் தொகுப்பதன் மூலமாக வழக்கிலிருக்கும் பல்வேறு உளவியல் ஒழுக்கவியல் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியும். சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது? என்னும் புதினத்தில் உளவியல் சார்சிந்தனைச் சிதறல்களையும் மனப் பதிவுகளின் அடையாளங்களையும் கண்டு கொள்ள முடிகிறது. சிவசங்கரியின் சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது என்னும் புதினத்தில் 'உளவியல் சிந்தனைகள்' என்ற கட்டுரையில் உளவியல் என்ற சொல் பற்றிய விளக்கம் அறிய முடிகின்றது. உணர்வு நிலை பற்றிய உளவியல் சிந்தனை பற்றியும் அறிய முடிகின்றது. சமூக மதிப்பீடுகளின் வெளிப்பாட்டில் உளவியல் சிந்தனை பற்றி அறிய முடிகின்றது. அறிவுநிலை வெளிப்பாட்டில் உளவியல் சிந்தனை பற்றியும் அறியமுடிகின்றது. மக்களின் வாழ்க்கையிலும் உளவியல்சார் சிந்தனைகள் வாழப்பட்டுருக்கின்றமைக்குப் பல அகச்சான்றுகளைக் காட்ட முடியும்.

# References

Ilampuranar, (1953) Tholkappiyam, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India.

Narayanasamy, (1956) Nattrinai Moolamum Uraiyum, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India.

Ramalingam, P. (2007) Manida Ulaviyal, Saradha Pathippagam, Chennai, India.

Sivasankari, (2017) Chinna Noolkanda Nammai Siraipaduthuvathu, Vanathi Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License